பக்கங்கள் தனிப்பிரதி 0—1—0 மலேயா, சிலோன் 6 சதம். REGD. NO. M.4004

SAMARASAM வார வெளியீடு

# சமரசம்

ஆசிரியர்: S. Md. சுல்தான் பக்தாதி

கோர்வை 13 | திருச்சி, தி. வ. ஆண்டு 1982 பங்குனித்திங்கள் 11-ம் நாள் (24—3—1951) சனிக்கிழமை | மணி 11

சவக்குழி அழைக்கிறது!

# திராவிடநாடு பிரிக்க முடியாது?

## திராவிடத் தவளைகளுக்கு நேரு சர்க்கார் பதில் உண்டா?

### மஞ்சள்பெட்டி பக்கலை ஏய்க்கமுடியாது!

நீங்கள் எந்த உரிமைக்காக சத்தியாக்கிரகம் செய்தீர்களோ, அந்த உரிமையை எங்களுக்குக் கொடுக்க மறுப்பது ஏன்? சைமன் கமிஷனைக் கருப்புக் கொடி பிடித்து எதிர்த்த நீங்கள், ஆச்சாரியாரைக் கண்டு கருப்புக் கொடி பிடித்த எங்களைத் தடிகொண்டு தாக்குவது ஏன்? பிரிட்டிஷ் துணிகளைக் கொளுத்தி அந்நாட்டுப் பொருள்களையே வெறுத்த நீங்கள் வடநாட்டு வாணிபத்தை எதிர்த்து அவர்களின் துணியைக் கொளுத்தும் எங்களைக் கைது செய்வது ஏன்? கள்ளுக்கடை மறியல் செய்த நீங்கள், வட நாட்டுக்கடை மறியல் செய்யும் எங்களைச் சிறையில் அடைப்பது ஏன்? பேச்சுரிமை, எழுத்துரிமை வேண்டும் என்று முழக்கமிட்ட நீங்கள், இன்று அதே உரிமைகளைக் கட்டுப்படுத்துவது என்?

நெஞ்சில் நீதியும், நேர்மையும், நாணயமும் கொஞ்சமாவது உங்களிடம் இருந்தால் இவைகளுக்கெல்லாம் சரியான பதில் கூறுங்கள். குன்றத்தூரிலே 144ஐ மீறிக் கூட்டம் நடத்த முயற்சித்ததற்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது நீதியா? எட்டு ரவுண்ட் அல்லவா சுடப்பட்டது! ஜாலியன் வாலா பாகையும், வெலிங்டன் ஆட்சியையும் மீறப்பட்டு விட்டதே! எங்களுக்குத் தரியும் கோர உருவம் வளர்ச்சியடைந்து வருகிறது என்று, புத்தகங்களின் தடையிலிருந்து—கூட்டங்களைத் தடைபடுத்தி—தலைவர்களைச் சிறையிலடைத்து—ஜாமீன் பணம் கேட்டு—தடியடி தர்பார் நடத்தி—துப்பாக்கியை நீட்டி சுட்டுத்தள்ளக்கூடிய அளவிற்கு வந்து விட்டது நிலைமை இவைகளையெல்லாம் நாங்கள் எதிர்பார்த்தது தான். ஆனாலும் எங்கள் இலட்சியம் பெரிது; அவைகளை மட்டும் நாங்கள் விட்டு விடமாட்டோம்!

போகும் இடம், வருமிடம், கல்நாட்டு விழா, கல்யாண விழா, கருமாதி, எழவு எங்கு போனாலும் எங்களைத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறீர்கள், குறிப்பாகத் தோழர் காமராசர்; ‘திராவிடக் கழகத்தாருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கும், ஒரு திட்டமோ இட்லசியமோ கிடையாது

உள்நாட்டிலே குழப்பத்தையும், வகுப்புத் துவேஷத்தையும் உண்டாக்கி வருகின்றனர். இனிமேல் அரசாங்கம் பார்த்துக்கொண்டு சும்மாயிராது!” என்று நாமாவளி பாட, தோழர் பக்தவத்சலனார் பக்கவாத்தியம் இசைக்க, அதை மித்திரனும், இந்துவும் கொட்டை எழுத்திலே பிரசுரிக்க, அதைப் பார்த்து ஆகஸ்டு அறப்போர் வீரர்களும், அக்ரகாரத்தாரும் ஆனந்தக் கூத்தாடுகின்றனர்.

ஐயா. சாமராசரே? எங்களுக்கா கொள்கை கிடையாது? ஆயிரமாயிரம் மேடைகளிலும், ஏடுகளிலும் தினந்தோறும் எடுத்துக்காட்டி வருகிறோமே! “திராவிடநாடு திராவிடராகிய நமக்குக் கிடைக்கவேண்டும்; புரோகிதமும், வருணாஸ்ரமும் ஒழிய வேண்டும்; அந்நிய நாட்டினர் இங்கு வந்து நம் பொருளைச் சுரண்டிச் செல்லக்கூடாது; உண்மைத் தமிழ் இலக்கியங்கள் வளர வேண்டும்” என்று. இவைகளையெல்லாம் தக்க ஆதாரங்களோடு, “ஆரிய மாயை”, “விடுதலைப்போர்”, “பணத்தோட்டம்” மூலமாக எடுத்துக் காட்டியிருக்கிறோமே! இதையறியாமல் காமராசர், கிராமபோன் ரிகார்டு போல் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லலாமா? எதிர்க்கட்சிக்காரர் என்ற காரணத்திற்காகத் தப்பாகப் பிரசாரம் செய்யலாமா? கொடுமைப்படுத்தலாமா? எந்த நாட்டிலாவது எதிர்க்கட்சிகளை இப்படி நடத்து வாருண்டா? இதை என் தோழர் காமராசர் அறியவில்லை?

யார் அறிந்தால் என்ன, யார் அறியாவிட்டால் என்ன? அன்று இந்தியை எதிர்த்தோம். ஏதோ புசு புசு வாணம் என்றார்கள். புகைந்தா போயிற்று நம் எதிர்ப்பு? அப்படிப் புகைந்து போயிருந்தால் இந்தி இஷ்டப் பாடமாகி இருக்காதே! கல்கத்தாவிலிருந்து இந்தி நல்லெண்ண தூது கோஷ்டி காஞ்சியை நோக்கி வந்திருக்காதே! அகதிகளின் பாதுகாப்புத் தலைவர் கித்வானி பெரியாரைச் சந்தித்து வட இந்திய எதிர்ப்பைப் பற்றி என் பேசப்போகிறார்? மாதவ மேனன் டெல்லி சென்றிருந்தாரே சர்தாருடன் நம்மைப்பற்றிவிவாதிப்பதற்கு அது ஏன்? ஆகவே, நாம் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கிறோம்! நம் வளர்ச்சியைக் காமராசரோ பக்தவத்சலனாரோ, கரை போட்டுத் தடுக்க முடியாது. நிலவைக் கண்டு பயந்துக் குடை பிடித்துக் கொள்கின்றனர்! தென்றலைத் தேள்க்கடி

✻ கலைதாசன் ✻

என்று நவில்கின்றனர். சோலைவனத்தைப் பாலைவனமென்று பகருகின்றனர்!

நாள் செல்லச் செல்ல தேர்தல் ஜுரம் வீசத்தொடங்கி விட்டது அவர்களுக்கு; ஆகவே, ஜன்னி பிறந்தவன போல் பேத்துகின்றனர்! பேத்தலில் அர்த்தமிருக்காது! அவியும் விளக்குச் சுடர்விட்டுத்தான் எரியும். அதுபோல நம்மையெல்லாம் அவர்கள் படாதபாடு படுத்திவிட்டுத்தான் போவார்கள்! அவர்களின் ஆதிக்கவெறி நமுடைய செங்குருதியை வேணமட்டும் சுவைத்து விட்டுத்தான் அடங்கும்! ஆகவேதான் அடக்குமுறை அம்புகளை நம்மீது ஆவேசதீரவாரி வீசுகின்றனர்!

காந்தியார் இருந்தால், இரத்தக் கண்ணீர் வடிப்பார்! இவர்களோ ஆனந்தக் கண்ணீர்தான் வடிப்பார்கள்! ஆனாலும் ஒரு வார்த்தை இறுதியாக. உங்கள் நாவசைத்தால் நாடு அசையும்; அதை யாம் அறிவோம், ஆனாலும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பகவத்சிங் எந்த உரிமைக்காகத் தூக்குமேடை ஏறினாரோ—சுபாஷ் எந்த உரிமைக்காக வீடுவாசல் துறந்து நாடு விட்டோடிப் போர் புரிந்து மறைந்தாரோ—திலகரும், கோகலேயும், மோதிலாலும் எந்த உரிமைக்காகத் தங்கள் பட்டம், பதவி சுகம் இவைகளைத் துறந்துத்தியாகம் செய்தனரோ—வீரபாண்டியன் எந்த உரிமைக்காக கயத்தாற்றுப் புளியமரத்துக் கயிற்றில் தொங்கப்பட்டாரோ—ஊமைத்துரை எதற்காகச் சுடப்பட்டு மாண்டாரோ—சிதம்பரனார் எதற்காகச் செல்வமெல்லாம் துறந்து சிறையில் செக்கிழுத்துக் கல்லுடைத்து மூத்திரம் பெய்யும் சட்டியிலே கஞ்சியையும் வாங்கிக் குடித்தாரோ—திருப்பூர்க் குமரன் எதற்காகத் தாணுக்காரன் தடியடிக்கிலக்காகி உயிர்விட்டாரோ—இன்னும் எண்ணற்ற தியாகிகளெல்லாம் எதற்காகத் தியாகம் செய்தனரோ—அவைகள் அந்த உரிமைகள், பறிக்கப் படுகிறதே என்றுதான் வேதனைப் படுகிறோம்! ஆனால் நீங்கள் வெட்கப்படவில்லை; வீர உரையாற்றுகிறீர்கள்! செய்யுங்கள்! அதைப் பற்றி எங்களுக்கு அக்கரை இல்லை.

ஆனால், எதற்கும் காரணம் காட்டி, ஆதாரம் எடுத்துக் கூறி, மறுத்தால் அது ஆண்மையாகும்; அறிவுடைமையாகும். அதைவிட்டு விட்டுப் பேத்துவதில் அர்த்தமில்லை சான்றாக, நாங்கள் திராவிட நாடு பிரிய வேண்டுமென்றால் நீங்கள் காரணம் காட்டி மறுப்பது கிடையாது. ‘திராவிட நாடு சாத்தியமில்லை, மிகவும் சிறிய நாடு, பிரிந்தால் வாழ முடியாது’’ என்று பல்லவி பாடுகிறார் பக்தவத்சலனார்! திராவிட நாட்டைப்பற்றி நாங்கள் திட்டவட்டமாக, வரலாறு காட்டி—நில நூல் காட்டி—மக்களின் பண்பாடு காட்டி—இனம். மொழி காட்டி—கூறியிருக்கிறோம்! அவைகளெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிபது, ஆகவே, மீண்டும் கூறுகிறேன்: “நாங்கள் கோரும் திராவிட நாடு இன்றைய சென்னை மாகாணத்தை. இதன் விஸ்தீர்ணம் 140 00 சதுர மைல்கள் மக்கட்டொகை 5 கோடி; தமிழர் 2½ கோடி பேர் மலையாளம், கன்னடம், ஆந்திரம் இவைகளில் அந்தந்த வட்டார மொழியே அரசியல் மொழியாகவும், ஆங்கிலம் பொதுமொழி

(4-பக்கம் பார்க்க)

"சமரசம்"
(சந்தா விவரம்)

உள் நாடு.

| | | |
|---|---|---|
| 1-வருடம் | ரூ. | 4-0-0 |
| 6-மாதம் | | 2-2-0 |

இலங்கை.

| | | |
|---|---|---|
| 1-வருடம் | ரூ. | 5-0-0 |
| 6-மாதம் | | 2-8-0 |

# 'சமரசம்'

1951-ஞ் மார்ச்-மீ 24-உ

## துன்பமும் இன்பமும்!

பிரிட்டிஷார் ஆண்ட காலத்தில் இந்தியாவின் விடுதலைக்கு முஸ்லிம்கள் எந்தவித களங்கமுமின்றி அரும்பாடு பட்டனர். சிப்டாய்க் கலகம் முதல் ஒத்துழையாமை வரை காங்கிரசுடன் ஒத்துழைத்ததின் பயன் பிரிட்டிஷார் கிரேக்கர் களுக்காசத் துருக்கியுடன் போரிட எல்லாக் குடி ஏற்ற நாடுகளையும், உதவி கேட்டபோழுது இந்தியாவை உதவிகேட்க மனந்துணியவில்லை

முஸ்லிம்கள் அரசியல் போராட்டத்தில் கலந்ததினால் பட்ட கஷ்டங்கள் சொல்லத் தரமன்று. ஆயிரக்கணக்கான மாப்பிள்ளைகள் குண்டுக்கும் தூக்கு மேடைக்கும் இரையானதும், எல்லைப்பட்டாணியர் நாடு கடந்ததும் மற்றும் லட்சக் கணக்கானவர்கள் சிறையில் வாடியதும் பெரும் சீமான்கள் பொருளையும், தொழிலையும் இழந்து ஏழையாகியதும் இபக்கம் கூறும் இணையற்ற சரித்திரமாகும்.

இவ்வாறு முஸ்லிம்கள் சுதந்திர வேட்கையினால் உள்ளதை யாவும் தியாகம் செய்து களைப்புற்றிருக்கும் தருவாயில் பிரிட்டிஷ் ஏஜண்டுகளின் சூழ்ச்சியால் ஹிந்து பிரமுகர்கள் இந்து மகா சபையை ஆரம்பித்து முஸ்லிம்களைச் சதி செய்து மத மாற்றம் செய்யத்தலைப்பட்டனர், மோதிலால் போன்றாரின் அரசியல் அறிக்கையையும், முசுலிம்களுக்கெதிராகப் பெரும் சதி நடபடதையும் காங்கிரசின் கட்ட வேலையையும் கண்டனர் எனவே முஸ்லிம் லீக்கைப் புனருத்தாரணம் செய்து தங்களுரிமையை நாட்ட வாதிட்டனர். முசுலிம்களுக்கு உரிமை வழங்க காங்கிரஸ் இந்தத்தலைவர்கள் இணங்கவில்லை. எனவே பிரிவினைதான் தக்க மருந்தென்று முசுலிம்கள் தீர்மானித்து பாக்கிஸ்தான் கோரிக்கை ஏற்பட்டது. உலக சூழ்நிலைகோப்ப இந்தியாவை கைவிட வேண்டிய கட்டம் பிரிட்டனுக்கு ஏற்பட்டது எனவே பிரிவினைத்திட்டம் ஏற்கப்பட்டது. காங்கிரசுக்கு இந்தியாவும் முஸ்லிம்களுக்கு பாக்கிஸ்தானும் என்று முடிவு கட்டப்பட்டது.

இந்திய அரசியலை காங்கிசார் ஏற்றனர். தலை கால் தெரியாமல் தவ்விக் குதித்தனர் ஆர்ப்பரித்தனர், பிரிந்த இந்தியா மதசார்பற்றதென்றும், முஸ்லிம்களுக்கு ஒன்றும் கிடையாதென்றும் பாக்கிஸ்தான் கேட்டதற்குப் பட்டுச் சொலையுங்களென்றும் பரிகசித்தனர் இதுவும் முஸ்லிம்களின் காலம்தான். பாகிஸ்தான் முசுலிம்களாவது சுதந்திரமாக வாழட்டும் என்று எல்லா இடுக்கண்களையும் ஏற்றுச் சகித்தனர் இந்திய முசுலிம்கள். ஆனால் மதசார்பற்றதென்று கூறிய போதிலும் இஸ்லாமியத்திற்கு மாற்றமான எல்லா உத்திரவுகளையும் பிறப்பிக்காமலிருக்க முடியவில்லை அப்படியிருந்தும், ஆட்சி நடத்தத் திறனின்றி வீண் செலவும் அழிவுத் திட்டங்களும் உண்டாக்கி கஜானாகாலியானதேயன்றி ஏதும் உருப்படியாகவில்லை. அத்துடனில்லாது லஞ்சம், வஞ்சம், கள்ள மார்க்கெட். சுயநலம் யாவும் கூடி உண்ண உணவு, உடுத்த ஆடை, குடியிருக்க வீடுமின்றி இந்திய மக்கள் தவியாய் தவிக்கும்படி ஏற்பட்டது. துன்பமானகட்டமாக வேயிருக்கிறது. நமது பட்ஜெட் பற்றுக்குறை எடுத்ததெற்கெல்லாம் வரி- நிமிஷத்திற்கொரு உத்திரவு என்றாகி விட்டது.

அதே பாக்கிஸ்தான் திறமையுடன் எல்லாவற்றையும் சாதித்து உள்நாட்டு கிளர்ச்சிகளையும் மடக்கி குறைந்த சட்டளத்தில் எங்கும் வீணில் சுற்றாத புத்திசாலித்தனமாகப் பட்ஜெட்டில் 21 கோடி மிச்சம் காட்டியிருப்பது முசுலிம்கள் மகிழக்கூடிய விஷயமென்பதை யாரும் மறுக்கமுடியாது. முசுலிம் லீக் பெற்றெடுத்த பாக்கிஸ்தான் சுபிட்சமாக விருக்கிறதென்றால் தாய் முசுலிம் லீக் மகிழாமலிருக்க முடியுமா? ஆகையால் இந்திய ஆட்சியாளரை நிதானத்துடன் விருப்பு வெறுப்பின்றி கடவுளுக்கு பயந்து யாரையும் சரிநிகர் சமானமாகப் பாவித்து வந்தால் நமக்கும் நல்ல வழியை ஆண்டவன் விடுவான் என்பது எமது கருத்து.

வாழ்க பாக்-பாரத்!

## எம். ஆர். ராதா அவர்களுக்கு எமது அனுதாபம்

நாடக உலகிலே பகுத்தறிவுக் கொள்கையைப் புகுத்தி நன் மதிப்பைப் பெற்றவரும், திராவிடத்தின் நன்மதிப்பைப் பெற்றவருமான நடிகவேள் M. R. ராதா அவர்களின் அருமை மகன் தமிழரசனும், துணைவியார் பிரேமாவதி அவர்களும், இவ்வுலக வாழ்வை நீத்த செய்தியறிந்து வருந்துகிறோம். அருமைத் துணைவியையும், மகனையும் பிரிந்து வருந்தும் நண்பர் M. R ராதா அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

## மன்னிப்புக் கோருகிறேன்!

திருச்சி "சமரசம்" ஆசிரியர் அவர்களுக்கு அபிராமம் நத்தம் A முகம்மது யூசுப் எழுதிக் கொண்டது.

நான் "யோகினி" என்ற பத்திரிகையில் 1951 மார்ச்சு இதழில், சந்திப்பு என்ற தலைப்பின் கீழ் "லைட் ஹவுஸ் மோகினி" என்ற கட்டுரை எழுதியிருந்தேன் அதில் "எங்களூர் பர்மா வியாபாரிகள் நிறைந்தது; கணவனைப் பிரிந்த மனைவியின் பருவத் துடிப்பு வேலைக்காரனை சரணடைவது இங்கு சர்வ சாதாரணம்" என்ற விஷயத்தை தவறுதலாகப் பிரசுரம் செய்து விட்டேன்; அதற்கு நான் என்னுடைய மன்னிப்பைக் கோரிக் கொள்வதுடன், ஷெ ஆட்சேபகரமான பகுதியை இதன் மூலம் வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறேன்.

அபிராமம்,
18-3-51 } A முகமது யூசுப்

நீங்கள் உபயோகித்தீர்களா?




## சூருவளியும் தறுதலை தட்சணாவும்!

ஆபாசச் செய்திகளை வெளியிட்டு வயிறு கழுவிய சூருவளி பத்திரிகை, ஈனத் தனமாகப் பேனாவைப் பிடித்துக்கொண்டு திராவிடத் தலைவர்களையும், தி. மு. கழகத்தோழர்களையும் தாக்கி எழுத ஆரம்பித்திருக்கிறது.

ஆதியிலே சுயமரியாதைக்காரனாக நடித்து, மாநாடுகள் கூட்டி மாபெரும் நிதி திரட்டி, மடியிலே கொட்டிக்கொண்டு மறைந்து, பாதியிலே மேயர் சிவசுப்ரமணிய பிள்ளை அவர்கள் பாராட்டுதலுடன் பத்திரிகை நடத்தி அவரால் முன்னுக்கு வந்து அவர் வீட்டிலேயே அவமானப்பட்டு சரணாகதியடைந்த சண்டியே! உன்னுடைய சல்லித்தனங்களையெல்லாம் உதறாதே! உன்னுடைய வண்டவாளங்களை தண்டவாளங்களில் ஏற்றுவது ஆபாசமாகும் என்று கருதியே விடுகிறோம் சைகோன் அப்பா பிள்ளை யார் என்பது உனக்குத் தெரியுமா? 45 வயதுக்கு மேலாகிய உன் சிற்றன்னையை உன்னால் திருத்த முடிகிறதா? நீ என்ன ஊருக்கு உபதேசம் செய்வது?

காற்றாடிப் பத்திரிகை பிரஞ்சு இந்தியாவில் காங்கிரஸைத் தாக்கவும். பிரஞ்சு வாழ்க எனப் புகழவும், வருமானம் பெற்றுக்கொண்டு சூருவளி என்னும் பெயரால் சுற்றப்படுகிறது! இந்திய யூனியனில் பெரியாரையும் அண்ணாவையும் தாக்க தன் தம்பியை ஆசிரியராகப் போட்டு இராவணன், வாதன் இவர்களிடம் வரதட்சணைப் பிச்சை வாங்கித்திரிவது எமக்குத் தெரியாதா? மரியாதையாக இருந்தால் போச்சு. அதைவிட்டு திராவிட கழகத்தினரிடமும், தி. மு கழகத்தினரிடமும் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்தால் அயோக்கிய சிகாமணியாகிய உன்னுடைய அப்பலங்கள் அனைத்தும் வெளியிலே விடப்படும்.

— அணு குண்டு

(தொடரும்)

**நடிகர்கள் தேவை!**

நடிகர், நடிகைகள் தேவை முழுவிவரங்களுக்கு விலாசமிட்டதபால் கவருடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுங்கள்.

**பத்திரா நாயகி
வித்துவ பால நாடக சபா,**
மிகேல்பட்டி P. O.
(திருக்காட்டுப்பள்ளி மார்க்கம்)
தஞ்சை ஜில்லா.

# கழுதைகள் மாநாடு!

வறுமைப் பித்தன்

தலைவர்: கோவேறுக்கழுதை
வரவேற்புக்கமிட்டித் தலைவர்: குட்டிக்கழுதை
திறப்பாளர்: வெள்ளி மூக்கனார்
இடம்: குட்டிச்சுவர்
காலம்: விடிய விடிய

சொற்பொழிவின் சுருக்கம்

**தலைவர்:**

சகோதரர்களே! நம் இனத்திலே இன்று பல குறைகள் ஏற்பட்டுவிட்டன. நமக்கு இந்த பஞ்சகாலத்திலே எந்தவிதமான வரும்படியும் இல்லை. நாம் பொறுக்கித் தின்பதில் கூட போட்டிக்கு வந்துவிட்டனர் சில அன்னக்காவடிகள்! ஆனால் நம் முதுகுகளில் மட்டும் பலமான வடநாட்டு மூட்டைகள் ஏற்றப்படுகின்றன. இப்படி மூட்டை சுமந்த முத்தன்களாக எத்தனை நாட்களுக்கு இருப்பது? இதற்கு இந்த மாநாட்டிலே ஒரு நல்ல முடிவு செய்யவேண்டும்.

**வரவேற்புக்கமிட்டித் தலைவர்:**

அன்பர்களே. நாம் இந்த நெருக்கடியான நேரத்தில் பல எதிர்ப்புகளையும் சமாளித்தாக வேண்டும். இன்றேல் நம் குட்டிச்சுவர்களுக்கே ஆபத்து வந்துவிடும் போலிருக்கிறது! நாம் இருந்த நிலையென்ன? இப்போது நாம் இந்த ஏழவுன்ஸ் ஆட்சியிலே கட்டெறும்பாக வல்லவா ஆகிவிட்டோம்? நம்மையெல்லாம் காண முடியாவிட்டால் குட்டிச்சுவரில்வந்து கண்டுபிடிக்கிறார்களே நம் எஜமானர்கள், அவர்கள்தான் நம்மைக் கவனிக்கிறார்களா? ஆகவே, நம் இனத்தவர்களையே ஒழித்துக்கட்டக் கிளம்பியிருக்கும் கும்பல்களை எதிர்க்க வேண்டியது நம் கடமையல்லவா? வடநாட்டுச் சுமைகளைத் தூக்கி தூக்கி கால்களும் முதுகும் வளைந்து விட்டனவே!

**திறப்பாளர்:**

இந்தக் குட்டிச்சுவர் திடலிலே எத்தனையோ மாநாடுகள் கூட்டியும் நம இனத்தவர்களுக்குப் புத்தியே வரவில்லை. நாம் சுமக்கமுடியாத மூட்டைகளையெல்லாம் பிச்சை சோறு கிடைததால் போதுமென மனித இனம் கூட சுமக்கக் கிளம்பிவிட்டது இனி நாம் இந்த நாட்டிலே இருப்பதா? இறப்பதா? இந்தச தொல்லைகளையெல்லாம் ஒழிக்க நம்மில் ஒருவரை சட்டசபை மெம்பராக்கவேண்டும்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. அடுத்துவரும் தேர்தலில் மிஸ்டர் குட்டிக்கழுதையண்ணாரை சட்டசபை மெம்பராக்கிவிடவேண்டும்.

2. மனிதர்களுக்கு 7 அவுன்ஸ் கிடைக்கிறதினால் நமக்கும் நம் எஜமானர்கள் அவுன்ஸ் கணக்கில் ஆகாரம் கொடுப்பதைக்கண்டிக்கிறோம். முன்பெல்லாம் காகிதமாவது கிடைத்தது. இப்போது அதற்கும் லாட்டரியாகிவிட்டபடியால் இனி நம்மால் மூட்டை சுமக்க முடியாதென ஸ்ட்ரைக் செய்யவேண்டும்.

3. நம் இயக்கப் பிரசாரத்துக்கு மிஸ்டர் வரிக்கழுதையாரை 0-0-0 சம்பளத்தில் அமர்த்தி கிராமங்கள் தோறும் கழுதைகள் மாநாடு நடத்தவேண்டும். அதற்கென சண்டிக்கழுதையார் தலைமையில் ஒரு கமிட்டி நியமித்து 'காள் காள்' என்று ஊர்தோறும் கத்தித்தீர்க்கவேண்டும்.

4. நம் இயக்க சம்பந்தமான செய்திகளை முட்டிக்கழுதையார் பத்திரிகையில் வெளியிடச் செய்யவேண்டும்.


## ஸ்ரீ வாசுதேவா பாங்க் லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: மாயனூர்.
கிளை ஆபீஸ்கள்: ஸ்ரீரங்கம் & திருச்சி. (பாலக்கரை)

பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பில்கள், டிராப்ட்டுகள், உண்டியல்கள், வசூல் செய்தும் மாற்றியும் கொடுக்கப்படும். மற்ற விபரங்கள் நேரில் தெரிந்துகொள்ளலாம்.

N. V. ஸ்வாமிநாதன்,
மேனேஜிங் டைரக்டர்.


## பெரியார்—அண்ணா இணைப்புக் கிளர்ச்சி

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு கழகத்திலே கண்ணீர்த் துளிகள் ஏற்பட்டது காரணமாக தி.மு.க என்றும், தி.க. என்றும் பிரிவினையாகி, நமது பொது எதிரிகளுக்கு இடம் கொடுக்கும் முறையில் கழகம் போய்க்கொண்டிருப்பது சரியல்ல என்றும், பெரியார் அவர்களிடம் அண்ணா அவர்களும் கலந்தே திராவிடநாட்டுப் பிரிவினைக்கு வழி செய்யவேண்டுமென்றும், இருவரும் ஒன்று சேரும்வரை இணைப்புக் கிளர்ச்சிக்காகப் பாடுபடுவதே தமது திடமான கடமையென்றும் பணியாற்றி வருகிறார் திரு, "கோரா". இவருடைய தொண்டு மகத்தானதாகும். இவருடைய உழைப்பையும், முயற்சியையும் பாராட்டுகிறோம்.

இணைப்புக்கிளர்ச்சியை எல்லோரும் வாங்கிப்படித்து இன்பத்திராவிடம் பெற வழி செய்வோமாக

விபரங்கட்கு,
போர்கை நிலையம்,
மேலகல்கண்டார்கோட்டை P.O.
திருச்சிராப்பள்ளி.

## விமான மூலம் மீன்கள்!

விமான மூலம்இடம் விட்டு இடம் செல்வது இப்பொழுது சர்வ சகஜமாகிவிட்டது. அநேக விதமான பிராணிகள் விமான மூலம் தூரதேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மீன்களும் ஆயிரக்கணக்கில் இம்மாதிரி அனுப்பப்பட்டுள்ளன. இது ஒரு அதிசயமே!

சில வருடங்களுக்கு முன் ஒரு விசேஷ மாதிரியான மீன் லேசான உலோகம் ஒன்றினால் கட்டப்பட்ட டாங்கிகளில் ஆப்ரிக்க காங்கோவுக்கு அனுப்பப்பட்டது மீன்கள் கொசுக்களை அழித்துவிடும் என்று கருதப்பட்டு காங்கோ வட்டாரத்தில் கொசுக்கள் அதிகமாகியிருந்ததால் அவைகளினால் மலேரியா பரவுவதைத் தடுக்க முயற்சிக்கப்பட்டது.

இம்மாதிரியான இயக்கத்தினாலும் போதுமான பலன் ஏற்படாததால் பழைய லீக் ஆப் நேஷன்ஸின் மலேரியா கமிஷனின் சிபார்சுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இவர்களுடைய சிபார்சின்படி மலேரியா ஏற்படக்கூடிய காலத்தில் நாள் ஒன்றுக்கு 6 குந்துமணி எடையும் நல்ல ஜுரம் வருகையில் 15 முதல் 20 குந்துமணி எடையும் கொய்னாவை உட்கொண்டால் ஐந்து அல்லது 7 நாட்களில் இந்த வியாதி நீங்கும்.

இம்மாதிரி உலகமெங்கும் மலேரியா ஏற்படும் வட்டாரங்களில் கொய்னா வெற்றியுடன் கொடுக்கப்பட்டுவருகிறது.

Tamil 466.


## ஏஜண்டுகளுக்கு அறிவிப்பு!

"சமரசம்" பில் பாக்கி உள்ள ஏஜண்டுத் தோழர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியும் இதுவரை சிலர் பாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். அவர்களின் பட்டியல் தயாரித்து பத்திரிகையில் வெளியிடுவதுடன் அவர்கள் மீது கோர்ட்டில் வழக்குத் தொடரப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாய் அறியவும்.

மானேஜர்
"சமரசம்"


## இசைத் தமிழ்!

12-3-51 மாலை 7 மணிக்கு திருச்சி பீமநகர் மாரியம்மன் கோவில் மைதானத்தில் சோதி சஞ்சீவியார் அவர்கள் தலைமையில் திருக்குறள் நூல் நிலைய முதல் ஆண்டு விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில் திருக்குறளின் சிறப்பைப் பற்றியும், ஆதித்தமிழ் மன்னனாகிய இராவணன் கொடியில் தேசியச்சின்னமாக யாழ் என்னும் சப்தக் கருவியை அமைத்திருந்தான் என்றும். தமிழ் மக்கள் இசையையே உணவாகக் கொண்டிருந்ததற்கு உதாரணம் (யாழ்-சப்தம்) யாழ்ப்பாணம் என்பது பற்றியும். சாமவேதத்திற்கு ஆதியில் எழுத்தில்லை இசை சப்தம்தான் இருந்தது என்றும், ஆரியர் வந்த பிறகுதான் தங்களுக்குத் தேவையானபடி எழுதிவைத்துக் கொண்டனரென்றும். அயோத்தி ராமனின் வழியைப் பற்றிய பிறகுதான் நம் நாட்டில் சிவா என்பதை மறந்து அய்யய்யோ அய்யய்யோ என்ற சொல்லை பழக்கத்தில் சொல்லிப் பாழடைந்தோம் என்றும், முஸ்லிம்கள் அய்யோ என்ற சொல்லை விட்டு அல்லா என்ற உயிர்நிலையைப் பெற்றாகள் என்றும், குறள் என்பது தாய்மையுடையது. அகிம்சையை, நீதியைப் போதிப்பது குரான் என்பது அறிவு ஆண்மையைப் போதிப்பது என்றும் ள் என்னும் சொல் தாய்மையை உடையது என்றும், ன் என்னும் சொல் ஆண்மையையுடையது என்றும் விளக்கமாக இசையின் மேன்மை பற்றிப் பேசினார்கள்.


## வியாபாரம் பெருக சமரசத்தில் விளம்பரம் செய்க!

# 'திராவிடக் கழக அன்பர்களுடன் பேசுவது எனக்குப் புதிதல்ல!'

## திரு. கா. மு. ஷெரீப் அவர்களின் மறுப்பு!

[இது 3-2-51 'சமரசம்' இதழில் ம. போ. சி கும்பல் மறத் தமிழராம்! என்ற தலைப்பில் வெளிவந்துள்ள செய்தியை மறுத்து திரு. கா. மு. ஷெரீப் அவர்கள் எழுதியிருக்கும் மறுப்புக் கடிதம். ஆர்.]

செந்தமிழ்ச் சோலையில் என்னைப் பேச அழைத்திருந்தது உண்மையே' அழைத்தவர் மேட்டூரிலிருக்கும் சேலம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரான திரு குருநாதன் அவர்களாகும். அவர் என்னை அழைக்கும்போது ஈரோடு நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. மீனட்சிசுந்தர முதலியார் பி. எ, எல். டி., அவர்களின் தலைமையில் பேசவேண்டும் என்று கேட்டுக் கொண்டாரே தவிர, திரு. நெடுஞ்செழியன் அவர்கள் வருவதாகக் கூறவேயில்லை. செந்தமிழ்ச் சோலையை நடத்துபவர்கள் யார் என்று நான் கேட்டதற்குக் கூட அவர், மேட்டூர் அணை அரசாங்க ஊழியர்கள் இலக்கிய ஆர்வம் கொண்டு நடத்துவதாகத்தான் சொன்னரே தவிர அது திராவிடக் கழகத் தொடர்பு உடையதாகக் கூறவில்லை.

பிறகு வந்த கடிதத்தில் திரு. மீனட்சிசுந்தரம் முதலியார் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டதுதான் விளக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு கூட்டம் நடக்க 4 நாட்களுக்கு முன்பு எனக்குக் கிடைத்த துண்டுப் பிரசுரத்தைப் பார்த்துதான் அதில் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் பேச இருப்பதும். செந்தமிழ்ச் சோலை திராவிடர்களுக்குரியது என்பதும் புரிய வந்தது. மறுநாள் என்னைப் பார்க்கவந்த திரு. குருநாதன் அவர்களிடமும் கேட்டேன். அவரும் உண்மையை ஒப்புக் கொண்டதோடு "அங்கு யாரும் அரசியல் பேசமாட்டார்கள்; நீங்கள் தாராளமாகக் கலந்து கொள்ளலாம்; கலந்து கொள்ள வேண்டும்" என்று வேண்டினர். அதற்கு நான் 'இதை முன்பே சொல்லி என்னை அழைத்திருக்கலாம். திராவிடக்கழக அன்பர்களுடன் மேடையேறிப் பேசுவது எனக்குப் புதிதல்ல" என்றுகூறி உண்மையை மறைக்க முயன்றதால் நான் அந்தக் கூட்டத்தில் நிச்சயமாகக் கலந்து கொள்ள முடியாது" என்று கூறும்படிக்கும் சொல்லியனுப்பினேன். அவரும், அதை ஒப்புக்கொண்டு அதன்படியே செய்வதாகவும் கூறிச்சென்றார்.

பிறகு நான் 15-1-51ல் மேட்டூர் அணையில் பேசுவதாக ஒப்புக்கொண்டிருந்த காங்கிரஸ் ஊழியர் சங்கக் கூட்டத்திற்கு அன்று மாலை 4 மணிக்குச் சென்றேன். செந்தமிழ்ச் சோலையினர் என்னை வந்து கண்டனர். "திருவாளர்கள் மீனட்சிசுந்தர முதலியார். நெடுஞ்செழியன் ஆகியவரும் வரவில்லை எங்கள் கூட்டம் தடைப்படுகிறது; அவசியம் நீங்கள் வரவேண்டும்" என்று வேண்டினர் நான் மேலே காட்டியுள்ள காரணத்தை விளக்கி. மறுத்துவிட்டேன் அப்புறம் திரு. நெடுஞ்செழியன் வந்திருக்கிறார் அவர்கள் கூட்டம் நடத்தினர்கள். தோழர் நெடுஞ்செழியன் அவர்களின் பேச்சு என் காதிலும் விழுந்தது. நான் ஏன் செந்தமிழ்ச் சோலையில் பேசவில்லையென்பதை என் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே பொதுமக்களுக்கு விளக்கி விட்டுத்தான் பிறகு நான் எடுத்துக் கொண்ட பொருள்பற்றி என் கூட்டத்தில் அன்று பேசினேன். என்னைக் கதர்ச் சட்டையைக் கழட்டி விட்டு திரு. நெடுஞ்செழியன் வரச் சொன்னதாக நான் கூறவேயில்லை "அரசியல் சட்டையைக் கழட்டி விட்டு யார் வேண்டுமானலும் செந்தமிழ்ச் சோலையில் புகலாமே!" என்று நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் பேச்சுக்கிடையே கூறினர். நானும் என் பேச்சுக்கிடையில், என்னிடத்தில் தேசீயம் என்ற ஒரே சட்டைதான உண்டு. அதைக் கழட்டிவிட்டு எப்படி (வெற்றுடம்புடன்) வெறும் இலக்கிய வாதியாக செந்தமிழ்ச் சோலையில் புகுவது? என்று கூட்டத்தினரிடம் கூறினேன். இவைதான் உண்மை.

உண்மையைத் தங்கட்குத் தெரியப் படுத்தவேண்டும் என்ற கடமை உணர்ச்சியால் இதை எழுதுகிறேன். "சமரசம்" சமரசப பணி புரிய வேண்டுமென்பதே என் விருப்பம்.

தங்களின்,
கா மு ஷெரீப்,
பொதுச்செயலாளன்,
மாநிலத் தமிழரசுக் கழகம்

(1-ம் பக்கம தொடர்ச்சி)

யாகவும் இருக்கும் "என்று.

இதுதான் எங்கள் பிரிவினையின் குறிக்கோள். இதை எதிர்க்கிறார்கள் இவர்கள்! மேலும் சொல்லுகிறார்கள் பிரிந்தால் வாழ முடியாதாம் என முடியாது? இன்று. பிரான்சு—ஸ்பெயின்—இட்டாலி—டென்மார்க்—பல்கேரியா—இங்கிலாந்து—கிரீஸ—நேபாளம்—சிலோன் இவைகளெல்லாம் தனியாட்சி நடத்தும்போது. பன்னெடுங்காலமாகவே தனியாகவும். சுற்றுச சார்புநிறைந்ததும் மூலப்பொருள்களும். 5 கோடி மக்கட்தொகுதியும் நிறைந்தத்திராவிடம் ஏன் தனியாக இருக்க முடியாது? இதை என அறிய வில்லை காமராசர். பக்தவத்சலம கோஷ்டிகள்!

ஆனலும். நாங்கள் இவர்களைக் கேட்கவில்லை இவர்களால் என்ன முடியும்? டெல்லித் தெய்வங்களின் கைப்பாவை இவர்கள் என்பதை நாங்கள் அறிவோம். அவர்கள் ஆடு என்றால் ஆடுவார்கள்; ஓடு என்றால் ஓடுவார்கள். இவர்களின் சூத்திரக் கயிறு அங்கு இருக்கிறது இவர்களுக்குள்ள அதிகாரமும் திறமையும் எங்களுக்குத் தெரியும்! அதனுல்தான் நாங்கள் இவர்களைக் கேட்கவில்லை. கேட்டாலும் கொடுக்க முடியாது கொடுக்க உரிமை இல்லை ஆகவேதான. டெல்லி சர்க்காரைக் கேட்கிறோம். "உங்களின் ஆதிக்கத்தின் கீழே நாங்கள் வாழமுடியாது ஆகவே எங்கள் நாட்டை எங்களுக்குக் கொடுத்து விடுங்கள்" என்று நேருவைக் கேட்கிறோம் வரலாறு—நில நூல்—விஞ்ஞானம்—பொருளியல்—அறிந்த நேருவைத்தான் கேட்கிறோம், அவர் சொல்லட்டும்பதில்

(தொடரும்)

இலங்கையில் இணையற்று விளங்கி
வெற்றிக்கொடி நாட்டிவரும்

903 ஸ்டீம் பீடிகள்

903 தங்கக் குதிரை சுருட்டுகள்

எங்கும் தனது இனிய மணமும், சிறந்த குணமும்,
உயர்ந்த பண்பையும் விளக்கி வருகிறது.

வாங்கி உபயோகியுங்கள்! எங்கும் கிடைக்கும்.

N. B. அப்துல் கபூர், பாலக்கரை, திருச்சி.

மனிதனுக்கு மனிதன் போக்கு வித்தியாசமுண்டு,
வட்டாரத்திற்கு வட்டாரம் மொழி மாறுபடுவதுண்டு
ஊருக்கு ஊர் உடை புதுமையாவதுண்டு!

இவ்வளவு மாறுபாடடையும் மக்களை நொடிப்பொழுதிலே ஒரே ஒற்றுமைக் கயிற்றிலே பிணைத்து விடுகிறது

ஸ்டார் புகையிலை

இதனை உபயோகிப்பதில் மக்கள் தங்களின் இன உடை, மொழி வித்தியாசங்களைக் காட்டிக்கொள்வதில்லை. நமது நாட்டின் இலட்சியமும், ஒற்றுமை; ஸ்டார் புகையிலையின குறிக்கோளும ஒற்றுமைதான்!

தயாரிப்பவர்கள் :
மீ. ந. அ. செய்யாது இப்ராஹிம் & சன்ஸ்,
புதுக்கோட்டை

E. A. L.

சந்தனுதி தைலம்
வாசனை ஊதுபத்திகள்

கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் அதிஅற்புத தைலம்.
இனிய மணத்தை வீசும் இணையற்ற பத்திகள்
இன்றே உபயோகித்துப் பாருங்கள்!
E. அப்துல் லத்தீப் சாயபு, பாலக்கரை, திருச்சி.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: சே. மு. சுல்த்தான் பகதாதி, அச்சிட்டது : இஸ்லாமியா அச்சகம், பாலக்கரை, திருச்சிராப்பள்ளி.